ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 28—6—53 இதழ் 52

வேங்கையும்-மானும்!

"உலகத்தின் உச்சியைக் கண்டவரென உலகம் போற்றுகிறது! குவிந்திருக்கும் பாராட்டுத் தந்திகளைப் பாருங்கள், இதோ — எவ்வளவு பெரிய குவியல்! தினசரி, என்னைக்காணவரும், கூட்டம் கணக்கு வழக்கில்லை. அவர்களை உட்காரச் சொல்லக்கூட எனக்கு வழியில்லை— இருப்பதோ, சின்னஞ் சிறு அறை! அதுவும், சொந்தமானதல்ல!! அவரையோ, உலகம் போற்றுகிறது. ஆனால், அவருக்கோ, ஒண்டவும் இடம் கிடையாது!"

*

மாவீரனென உலகத்தின் வாழ்த்துக்கள் குவியும், பனிப்புலி தேன்சிங்கின், மனைவி, கடந்த சில நாட்களுக்குமுன், தன்னைச் சந்தித்த பத்திரிகை நிருபரிடம், இவ்வண்ணம் தெரிவித்தாராம்.

அம்மையின் பெயர் அங்க்லஹமு என்பதாம்.

தேன்சிங்—இந்தப் பெயர், எலிசபெத் ராணியிலிருந்து சாதாரண 'எலிமெண்டரி' ஸ்கூல் ஆசிரியர் வரை, உச்சரிக்கப்படுகிறது.

உலகத்தின் மணிமுடியென வியந்து கூறப்பட்ட எவரெஸ்ட் உச்சியை எட்டிப்பிடித்து, சரிதத்தில் பெயரைப் பொறித்துக் கொண்டுவிட்டார். தேன்சிங்.

ஆனால், அவரது வாழ்க்கை நிலை, என்ன? திருமதி தேன்சிங் செப்புகிறார், இதோ!

"உலகம் என்கணவரைக்கொண்டாடுகிறது — சந்தோஷப்படுகிறேன். ஆனால் அதுபோதுமா? ஏழைகளாகிய எங்களை கொண்டாடிவிட்டால் திருப்தி ஏற்பட்டுவிடுமோ?"

வேதனையோடு, கேட்கிறார் — இன்று தேன்சிங், மாவீரன்! நேற்று, சோற்றுக்குத் திண்டாடியவர்! மலையுச்சி யேறச்சென்றார், குழுவினர் அளித்த கூலிக் காசுகளைக்கொண்டு வயிறு கழுவியவர். அதனையும், அம்மையார், அறிவித்திருக்கிறார்!

உண்மைதானே? உலகம் புகழ் மாலை சூட்டிவிடலாம்! பத்திரிகைகள், பக்க பக்கமாகத் தீட்டலாம்! ஆனால், அதுபோதுமா? நாகரீகம் தெரியாதவரெனக் கூறப்படும், 'ஷெர்பா'க்களில், அவரும் ஒருவர். உயிரைத் திரணமென மதித்து, தாக்கும்குளிரைத்தாங்கிக்கொண்டு காற்றில்லாத பிரதேசத்தில்,தத்தித் தவறி அந்தப் பனியுச்சியை அடைய அவர், என்ன பாடுபட்டாரோ! அப்போது, அவருள்ளம், எத்தகைய எண்ணங்களைச் சுமந்ததென்பதை யார் அறிவார்?

இன்று புகழ்மாலை! பூரிப்புச் செய்தி!!

ஆனால், பனிமலையிலிருந்து தவறி வீழ்ந்திருந்தால், என்ன கிடைத்திருக்கும்?

இன்று மகிழும், இதே மனைவியார், தமது இரண்டு குழந்தைகளையும் கையிலேந்தியவாறு, பிச்சையெடுத்திருக்கத்தானே வேண்டும்?

இன்று போற்றுவோரில், எத்தனைபேர், உதவி செய்ய முன் வந்திருப்பர்? அங்க்லஹமு அம்மையை. நேபாள பிரதமர் சந்திக்கிறார், இன்று! கல்கத்தா இதழாம் 'ஸ்டேட்ஸ்மென்', நிதிதிரட்டத் துவங்கியுள்ளது — அதை ஆதரித்து 'இந்து' தலையங்கம் தீட்டுகிறது — இங்கே, வா! அங்கே வருவாயா?— என்றெல்லாம் அழைக்கிறார்கள். லண்டன் கூவியழைக்கிறது—அமெரிக்கா ஆதரவுக்குரல் தருகிறது இத்தனையும், எதனால்? அவர், பனிமுடியைக் கண்டதால்!

இது ஏற்படாமல், ஒரு சிறிது, தவறியிருந்தால், எவர், முன் வந்திருப்பர்? இன்று, தேன்சிங்கின் பெயரை, கொட்டையெழுத்துக்களில் பொறிக்கும் ஏடுகள், ஏதோ ஒரு மூலையில், 'தேன்சிங்—தோல்வி' என்றோ, 'தேன்சிங்—மரணம்' என்றோ, சிறு செய்தியைப் போட்டிருக்கும்.

இன்று, இவ்வளவு புகழ் பெற்ற பின்னரும், திருமதி தேன்சிங் செப்புகிறார்—"என் கணவருக்கு யாராவது, நிதி கொடுத்தால், அந்தப் பணத்தைக் கொண்டு, என் பெண்களைப் படிக்க வைப்பேன் — கலியாணம் செய்து கொடுப்பேன்— வீடு கட்டிக்கொள்வேன்", என்று வெளியிடுகிறார்.

அந்த அம்மை, ஸ்விட்சர்லாந்திலே மாளிகை வாங்கி, பெல்ஜியத்தின் கண்ணாடிகளைப் பொருத்தி, காஷ்மீரத்தின சம்பளிகளை அலங்கரித்து, பாரிஸில் செய்த பன்னீரும் பலரக வாசனைத்திரவியங்களும் தெளித்து, அமெரிக்காவில் தயார் செய்த அழகான காரில், குழந்தைகளை வைரங்களால் அலங்கரித்து, 'வாழ்வேன்—என்று, கூறவில்லை. காரணம், அந்த அம்மையாரின் தேவை—சின்னஞ்சிறு வீடு, சொந்தத்தில்—குழந்தைகள் கவலையின்றி வாழப் பணம்.

எவ்வளவு பெரிய மாவீரன், தேன்சிங்?—என்பதைக் கவனிப்பதைவிட, அவ்வளவு பெரிய வீரனின் குடும்பம் இவ்வளவு அவதியான நிலைமையிலா?, என்பதையே கவனிக்க வேண்டும்.

சொந்தத்தில் ஒரு வீடு!—இது, அவருக்கு, கிடைக்க முடியாத பேறெனக்கருதுகிறார்.

கவலையில்லாமல் காலங்கழிக்கப் பணம்!—இதுதான், அவருக்குத் தேவையானது.

தேவையானது மட்டுமல்ல, 'இதெல்லாம், நமக்கு எட்டாதது!' என்றும் கருதியிருந்தவர்.

அந்தளவுக்கு ஏழ்மை—வாழ்க்கையில வளைந்துபோன நிலைமை.

தேன்சிங் மாவீரன் — ஆனால். ஏழை! பனிப்புலி உலக சரிதத்தில் இடம்பெற்றவர்தான ஆனால்,ஒண்டவும் இடமில்லாதவர்! நாகரீகமில்லாத மலைசாதியினரைச்சேர்ந்தவர்!

பாலைவனம் போன்ற வாழ்க்கையில் பரிதவிப்பவோருக்கு, சிறு சோலை தென்பட்டாலும் போதுமல்லவா? அந்த நிலையில். தேன்சிங் இருக்கிறார்! தேனசிங்மட்டுமல்ல, அவருடைய கூட்டமே இருக்கிறது! ஆசைகளை அடக்கியவண்ணம், தங்கவும் வீடில்லாமல், வாழ்க்கையையும் நடத்தமுடியாமல் தவிக்கும், 'தேன்சிங்'கின் இனம், எங்கும் இருக்கிறது.

தேன்சிங், வீரர் — உலகப் பிரசித்தி பெற்றவர்.

ஆகவே, அவருக்கு, வீடு வாங்கித்தர முன் வருகின்றனர் — நிதி சேர்க்க 'நான், நீ' என்று போட்டி போடுகின்றனர்—'அவர், என் நண்பர் தெரியுமா?' என்று கூறிக்கொள்ள, போட்டி போடுகின்றனர். யார்? யார்!—உலகத்தின் பிரமுகர்கள்! பிரபுக்கள்! ராஜாதி ராஜர்கள்! பெரிய பத்திரிகைக்காரர்கள்!'

ஆனால், இவர்களின் 'கைலாகு' அல்ல—கண்பார்வைகூடக் கிடைக்காமல், வாதைப்படும் 'தேன்சிங் கூட்டம்' இருக்கிறதே—அதையே, சிந்திக்கத் தூண்டுகிறது, நமது உள்ளம்.

*

தேன்சிங், பனிப்புலி — ஆனால்! எவரெஸ்டைப் பிடிக்காவிட்டாலும் அவரவர் அளவுக்கும் வசதிக்கும் தக்கபடி, உலகம் ஒழுங்காக நடைபெற உதவியவண்ணம் இருக்கிறார்களே, ஏழைகள், அவர்களுடைய நிலை என்ன? தங்கம் எடுக்கிறான்— அது, லண்டன் ராணியின் ரதத்திலும், பாரிஸ் சீமாட்டியின் கையிலும், மாளிகையரசியளின் கழுத்திலும், கிடக்கிறது! ஆனால், அவன் காணும் பயன்? பாங்கியில் லட்சக் கணக்கான ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்கிறான், ஏழைக் குமாஸ்தா—அவன் வீட்டில், தினசரி வாழ்க்கையை நடத்தச் செய்யும் போராட்டம், சாமான்யமா? களஞ்சியமாக நெல்லைக் குவிக்கிறான்!—அவனது கஞ்சிக்கலயத்தில், கூழா இருக்கிறது?-தேள்! அல்லது நீர்!உடல் மினுக்கும்ஆடைகளை நெய்கிறான்—அவன் திண்டாடுவது அரை உடம்பை மறைக்கவும் ஆடையில்லாத நிலை! பள்ளிக்கூடங்கள் கட்டி-அதற்குப் பக்குவமான இருப்பிடங்கள் அமைத்து—சுவர் கட்டி — சுண்ணம் தீட்டி—சிங்காரமானவளைவுகள் வைத்து, சீர்பெறச் செய்கிறானே, ஏழை. அவனுடைய மகன், ஒரு வேளையாவது அந்தப் பள்ளியில் உட்காரமுடிகிறதா?

கழனியில் விதைத்து, வளர்த்து களஞ்சியமாக நெல்லைக் குவிப்பது காத்தானைப் பொறுத்தளவில், அது ஒரு 'எவரஸ்டை'ப் பிடிப்பது போலத்தான்.

சுரங்கத்துள் புகுந்து, 'பாறை வெடிக்குமோ! சாவு எப்பவோ!' என்று கலங்கிய வண்ணம், தங்கத்தை எடுத்து, பெருமூச்சோடு, வெளியே வருகிறானே — கருப்பன், அது அவனைப் பொறுத்தளவில், 'ஒரு எவரஸ்ட்' போலத்தான்.

விஷம் கக்கும் பாம்பும், காலில் தைக்கும் கருவேல முள்ளும், வெய்யிலும் மழையும், தாக்கினாலும் தாங்கிக்கொண்டு, உழைக்கும் 'தேன்சிங்—கூட்டம்', இது. இந்த உழைப்பாளரின், கூட்டத்துக்கு உதவ வருபவர், யார்?

எலிசபெத்தின், அழைப்பு வேண்டாம்! நேருவின், கருணைப் பார்வையுண்டா?

கல்கத்தா 'இதழ்' நிதி திரட்டித் தரவேண்டாம்—'தினமணி' இதழ் கனிவான சொல்லைத் தருகிறதா?

குழந்தைகளைப் படிக்கவைக்க நிதி தரவேண்டாம்—அனுமதி தருகிறாரா, ஆச்சாரியார்?

மனம் வருவதில்லையே, இந்த மகானுபாவர்களுக்கு! என்ன காரணம்?

இவ்விதம், சொந்த வீடோ—சுகமான வாழ்வோ— கிடையாது, அநாகரீகக் கூட்டமாய் வாழ்வோர், ஒருவரா, இருவரா!

இதோ, பட்டியல் தருகிறார் ராஜேந்திரர்—இந்திய ஜனாதிபதி.

21-கோடி மக்கள், 'இவ்வித நிலையிலிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருப்போர், இந்தத் தொகையில், 14-கோடிபேர்.

பிற்பட்ட வகுப்பினராக இருப்போர், இந்தத் தொகையில் 7-கோடி பேர்.

இந்தக் கணக்கு விபரத்தை இன்னும், சுருக்கமாகத் தருகிறார்— ஆசியஜோதி, பண்டிதர். அவர், கூறுவது—

"90-சதவிகித மக்கள் இந்நிலையில் இருக்கிறார்கள்"

எங்கே? — புராதனப் பண்பாடு நிரம்பி வழிவதாகப் பண் பாடுகிறார்களே, இந்த, இந்திய உபகண்டத்தில். அங்குள்ள நிலைதான்—அரு

(அடுத்த பக்கம் பார்க்க)

விருதுநகரில்—இராமநாதபுர மாவட்ட மாநாடுகள்

27—6—53-ல் பெண்கள் முன்னேற்ற மாநாடு

28—6—53-ல் தி. மு. க. அரசியல் மாநாடு

திராவிடநாடு

காஞ்சி] 28—6—53 [ஞாயிறு

விருதையும், தில்லையும்!

வரும் 27, 28 தேதிகளில் விருதுநகர் நோக்கிவாரீர்!—என, இராமநாதபுர மாவட்டத்தினர், அழைப்பு விடுக்கின்றனர்.

ஜூலை 4, 5 நாட்களில் சிதம்பரம் நோக்கிப் புறப்படுவீர்'—என, தென் ஆர்க்காடு மாவட்டத்தினர், அன்பழைப்பு விடுத்துள்ளனர்.

விருதையிலும், தில்லையிலும், இந்தத் தேதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட மாநாடுகள், சீரும் சிறப்புடன், நடைபெறப்போகின்றன. விருதையில் முதல் நாள் தோழியர் அருண்மொழி தலைமையில பெண்கள் முன்னேற்ற மாநாடும், 2-ம் நாள் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் தோழர் எம். எஸ். சிவசாமி திறந்து வைக்க, அரசியல் மாநாடும் நடைபெறவிருக்கிறது. முதல் நாள் மாநாடு பெரும்பாலும் பெண்களே பங்கெடுத்துக் கொள்ளப்போகும் மாநாடாகும். இரண்டாவது நாளில், பொதுச் செயலாளரும் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார். இரண்டு நாட்களிலும், விருதையில் பிரச்சார நாடகங்கள் இருப்பது போன்றே, தில்லை மாநாட்டின் இரண்டு தேதிகளிலும், நாடகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. கழகத்தின் முன்னணி வீரர்களும், பொதுச் செயலாளரும் பங்குகொள்ளுகிறார்கள். முதல நாளைய சீர்திருத்த மாநாடு தோழர் க. அன்பழகன் எம். ஏ. தலைமையில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை துவக்கி வைக்கவும், இரண்டாவது நாளைய தி. மு. க. மாநாடு தோழர் சி. பி. சிற்றரசு துவக்கி வைக்க, தோழர் அண்ணாதுரை திறந்து வைக்கவுமாக, நடைபெற இருக்கிறது.

*

தி. மு. க. வின், இரண்டாவது மாவட்ட மாநாடுகளின் வரிசையில் இடம் பெறப்போகும் இவ்விரு மாநாடுகளின் சிறப்பை மக்கள் அறிவர்.

நம்முடைய மாநாடுகள் என்றால், கூடிக்கலைவது அல்ல — கிடைத்த திறமையையும் பெற்ற தொண்டர்களையும் சந்தித்து, பட்டை தீட்டிக் கொண்ட வைரங்களைப்போல, அமைப்பு முறையையும் ஆர்வத்தையும் வளர்த்துக்கொள்வதாகும்.

கடந்த மாவட்ட மாநாடுகளுக்குப் பிறகு, இராமநாதபுரத்திலேற்பட்டிருக்கும், அரசியல் விழிப்பையும், தென் ஆற்காட்டில் மலர்ந்திருக்கும் ஆர்வக்களிப்பையும், நாம், நன்றாக அறிவோம்.

கழகத்தின் முன்னணி வீரர்களை வரவேற்புக் கழகக்காரராகக் கொண்ட இந்த இரு மாநாடுகளும், தத்தமது மாவட்டக் கழகங்களின் வலிவையும் பொலிவையும், மக்களுக்கு எடுத்துக் காட்டுமென எதிர்பார்க்கிறோம்.

ஆர்வமுள்ள வீரர்காள்! உங்கள் அணிவகுப்பை, மாற்றாருக்கு மனமருட்சி அளிக்கும் வகையிலும், கழகத்தார் களிப்படையும் வகையிலும் காட்டவாரீர், விருதைக்கும், தில்லைக்கும் என, வரவேற்புக் கழகத்தார் விடுத்திருக்கும் அன்பழைப்பை, உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். வருக! வருக!!

(முன் பக்கத் தொடர்ச்சி)

மந்த ஜனாதிபதி வெளியிடுகிறார்— ஆசைக்குகந்தவரெனப் போற்றப்படும் பண்டிதர் 'ஆமாம்' என்கிறார். இந்த 21-கோடி மக்களின், ஏழ்மையைக் களைந்து, வறுமையைப் போக்க, என்ன செய்ய வேண்டும்?

அண்மையில் கூடிய, பிரஜா—சோஷியலிஸ்டு கட்சி மாநாட்டில், ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள் "சர்க்கார் ஆவண செய்யவேண்டும்'' என்பதாக. இதுபோன்ற தீர்மானங்களை, மேற்படி கட்சியைப் போன்றோர், அடிக்கடி செய்துவிடுகிறார்களல்லவா? செய்வதும், சுலபம்! ஏதோ, தங்களுக்கு ஏழை மக்கள்பாலுள்ள அபிமானத்தையும்காட்டிக்கொண்டதாகவும், ஆகுமல்லவா!

இதனால்தானோ என்னவோ, இப்போது இந்திய சர்க்கார், கமிஷன் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள — நாட்டிலுள்ள பிற்பட்ட மக்களின் வாழ்வை வளமாக்க, என்னென்ன செய்யவேண்டும்?—என்பதைக் கண்டுபிடிக்க.

இந்தக் 'கண்டுபிடிக்கும்' கமிஷனுக்கு காகா காலேல்கார் என்பார் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

பிற்பட்ட சமூகமக்களை எப்படி முன்னேற்றுவது என்பதைக்குறித்து, ஆராய்ச்சி செய்வதே, இக் கமிஷனின் வேலையாகும்.

வேலையை விவரித்துப் பேசியிருக்கும் காகா காலேல்கார், 'என்ன செய்யப் போகிறேன்? எது செய்யப் போகிறேன்?' என்று, முகாரி, எழுப்புகிறார்.

உண்மையில் இந்தப் பிரச்னை, மோகனராகம்பாடிடுவதால்,முடியக்கூடிய பிரச்னை அல்ல.

பிற்பட்ட வகுப்புகள் என்ற பிரிவின் கீழ் 1331 துணைப்பிரிவுகள் இருக்கின்றன.

நெல்லிக்காய் மூட்டைகள்போல், மதம், ஜாதி, காரணமாகப் பிரிந்து கிடக்கும் மக்கள் விம்மி வழிகிறார்கள்.

இவர்களை, உல்லாசமாகவாழும் 10 சதவிகித மக்களின் வாழ்க்கைக்குக் கொண்டு வருவது, சாமான்ய விஷயமல்ல.

கல்வியில் முன்னேற்றம், முகிழ்க்க வேண்டும்.

பொருளாதார நிலையில் முன்னேற்றம் வேண்டும்.

சமுதாய மேடு பள்ளங்கள் சமப்படுத்தப்பட வேண்டும்.

எப்படி? எவ்வழியில்?—என்பதில், கருத்து வேற்றுமைகள், ஏற்பட்டாலும், இம் மூன்றும் பிற்பட்ட மக்களின் வாழ்வில் முகிழ்க்கச் செய்தால்தான், அவர்கள் வாழ்வில், புதுமலர்ச்சியைக் காண முடியும்!

இந்தப் பிரச்னைகளுக்கு வழிகளைக்காணப் போகிறதாம், இக் கமிஷன்!

வாழ்த்துகிறோம்— வரவேற்கிறோம்—ஆனால், இதற்கு வழிகளைக் கண்டு பிடிக்க முனையும் இக் கமிஷனின் உள்நோக்கம் யாது?— இதனை எண்ணும் போதுதான், சங்கடமாக இருக்கிறது.

இக்கமிஷனை உண்டாக்கியிருக்கும், தேசிய சர்க்கார், முதலாளி— தொழிலாளி முறையிருக்க வேண்டுமென்கிற அவாவுடையர்கள்— ஜாதிய பேதங்களை ஒழிப்பதில் அக்கரையில்லாதவர்கள் — பொதுவுடைமைக் கொள்கையென்றால் பிடிக்காதவர்கள் — வர்ணாசிரமம் வாழப்பாடுபடுகிறவர்கள்.

வேங்கையிடமிருந்தா, மானுக்கு நீதி கிடைக்கமுடியும்? வேடனிடமிருந்தா, புறாவுக்கு, அன்புகிடைக்க இயலும்?

ஏதோ, 'பிரஜா-சோஷியலிஸ்டு'கள் தீர்மானம் போடுவதுபோல, தேசிய ஆட்சியாளரும் இக்கமிஷனை அமைத்துள்ளார்களே தவிர, உருவான பலன் எப்படி ஏற்படமுடியும்?

கமிஷன், கஷ்டப்பட்டு, பல விபரங்களைச் சேகரிக்கலாம் — விவரித்துக் கூறலாம்.

ஆனால், விஷமரம் சாக, இந்த ஆட்சியாளரால், என்ன செய்யமுடியும்?

உழைத்தும், வாழமுடியாத கூட்டத்தை, வாழவைக்கவும் ஆசை—

உல்லாசபுரி அலுங்காமல இது நிறைவேற்றப்படவேண்டும் என்பதும், இவர்தம் ஆசை—

இது, எப்படி சாத்தியமாகும்? வேங்கையை ஒழிக்காது, மானுக்கு நீதி கிடைக்கவா இயலும்?

இதனை, எண்ணிப் பார்க்கவேண்டும், கமிஷனிலிருப்போர்.

இந்தச் சமுதாயம், ஓர் சாக்கடை —இதனை அழித்து, புதுவாழ்வு பூக்கச் செய்யவேண்டும்.

கண் துடைப்பு வேலைகள், கவைக்குதவாது.

மான், அழகாகத் துள்ளினால், அதனைக் கட்டி அணைக்கவருவதுபோல வரும் வேங்கையைப்போன்றோரின் உள்ளத்திலிருந்து 'நீதி' எப்படிக் கிடைக்கும்?

'தேன்சிங்'போல சிறப்புப் பெற்றால், கைலாகு தர வருவார்கள்.

செத்து வீழ்ந்தால், சிறிதுகூடச் சிந்தாகூலப்படமாட்டார்கள்.

வேங்கைகள் நிரம்பிய நாடு, இது மிக மிக விசித்திரமான அமைப்பைக் கொண்டது!!

ஜூலை 8

புதிய கல்வித் திட்டக் கண்டன நாளை, ஜூன் 21-ல் வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த நண்பர்களுக்கெல்லாம், என் நன்றி.

புதிய திட்டத்தை எதிர்த்து அறப்போர் நடத்தவேண்டும் என்ற ஆர்வம் வளருவது கண்டு மகிழ்கிறேன்.

அறப்போர்த் திட்டத்திற்கான வழிவகைகளை அன்புகூர்ந்து எனக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

★

* **இடையில் மற்றோர் பணி!**

* பொதுமக்களிடம் ஜூன் 21ல் பிரச்னையை விளக்கினோம். அடுத்ததாக தி. மு. க. வின் ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்களிடம் நிலைமையைக் கூறிட வேண்டும்.

* அந்தத் தூயநோக்கத்துடன் தி.மு.க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்கள் உள்ள ஊர்களில்மட்டும்—பேரூராக இருப்பினும், சிற்றூராக இருப்பினும்—ஊர்வலமாகச் சென்று, அவரைக் கண்டு பேசி, புதிய கல்வித் திட்டக் கண்டன அறிக்கையை அவரிடம் தந்து, சட்டசபையிலே, புதிய திட்டத்தை எதிர்த்துப் பேசி, மக்கள் சார்பாகப் போராடும்படி, கேட்டுக்கொள்ளவேண்டும்.

* ஊர்வலத்தில், புதிய கல்வித்திட்டக் கண்டனச் சொற்கள் பொறித்த அட்டைகள்மட்டுமே எடுத்துச் செல்லவேண்டும் — ஒலிகளும் அது பற்றிமட்டுமே இருக்கவேண்டும்.

* ஊர்வலத்தில், அமைதிக் குறைவு வரத்தக்க, எந்த நடவடிக்கையும் புக இடமளிக்கக்கூடாது.

* ஊர்வலமாகவந்து தங்களிடம் 'அறிக்கை' தரப்போகிறோம் என்று எம். எல். ஏ. அவர்களுக்கு முன்கூட்டியே எழுதிவிடவேண்டும்.

* அவர் அன்று ஊரில் இல்லாவிட்டால், அவர் இல்லத்தவரிடம் அறிக்கையைக் கொடுத்துவிட்டு அமைதியாகக் கலைந்துவிடவேண்டும்.

* ஊர்வலத்துக்கு, முன்னதாகவே போலீஸ் அனுமதி பெறவேண்டும்.

* போலீஸ் அனுமதி மறுத்தால், அமைதியான முறையிலே தடையை மீறவேண்டும். அடித்தால், தாங்கிக்கொள்ளவேண்டும், கைது செய்தால் சிறை புகவேண்டும். பலாத்கார உணர்ச்சிக்குத் துளியும் இடம் தரலாகாது.

* ஊர்வலத்தின் அளவு சிறியதாக இருந்தாலும் கவலையில்லை — ஊர்வலமாகச் சென்று எம். எல். ஏ. யிடம் அறிக்கை தருவதுதான் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும்.

* இந்தக் காரியத்தை ஜூலை 8 மாலை, நடத்தித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

* ஜூலை 8! கவனமிருக்கட்டும்—தி. மு. க. ஆதரவு பெற்ற எம். எல். ஏ. க்களிடம்மட்டும்!!

* எங்கெந்த ஊரில் யாரார் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற ஏற்பாடாகிறது என்பதை உடனே எனக்குத் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

* ஜூலை 8! நமது ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்களைச் சந்திப்போம்.

* பர்மிட் லைசென்சு பேரம்பேச அல்ல! பிழைக்க வழி கேட்க அல்ல! நமது பின் சந்ததியை வாழவைக்க!! நமது இனத்தை இழிநிலையிலே வீழாதிருக்கச் செய்ய!!

* ஜூலை 8! ஆச்சாரியாரின் அக்ரமம் நிறைந்த அக்ரகாரத் திட்டத்தைக் கண்டித்து, எம். எல். ஏ.க்கள் மூலம் நமது அறிக்கையை, ஆளவந்தார்களுக்கு அனுப்புவோம்.

* தீட்டிடும் திட்டத்தைத் திறம்பட நடத்தி, தித்திக்கும் செய்தியை எனக்களித்து பெருமை தரும், நண்பர்காள்! தோழர்காள்! ஜூலை 8 வெற்றி பெறச் செய்யுங்கள்.

வணக்கம்.

அன்பன்,

அண்ணாதுரை,

பொதுச் செயலாளர், தி. மு. க.

வருத்தம் தெரிவிக்கிறார்கள்!

[அடிகள்]

டில்லியின் பிடியிலிருந்து, நாம்—தென்னாட்டார்—திராவிடப் பெருங்குடி மக்களாகிய நாம் விடுபட்டாலொழிய நல்வாழ்வு கிடையாது. நம்முடைய செல்வம் நமக்குப் பயன்பட வேண்டும். நம்முடைய தேவைகளை நிறைவேற்ற நம்மிடம் பணம் இருக்கவேண்டும். நம்முடைய செல்வத்தை — வருவாயை, பிறத்தியானிடம் கொடுத்துவிட்டுப் பல்லிளித்து நிற்கும் நிலை நமக்கு ஏற்படக்கூடாது. அதைவிடக் கேவலம் — இழிவு வேறெதுவும் கிடையாது. உழைப்பவர்கள் உழல்கிறார்கள்; ஊசலாடுகிறார்கள். உழைக்காதவர்கள், உல்லாசபுரியில் உன்மத்தராய் வாழ்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

திராவிட இனத்தவராகிய நாம், திராவிட மக்களின் முன்னேற்றத்தை விரும்பி, அதற்கென ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்து, அதன் வாயிலாக, திராவிட மக்களின் உரிமைகளும், உடைமைகளும் பறிக்கப்படுவதை எடுத்துக் காட்டி, அவை மீட்கப்படுவதற்கு வேண்டிய வழி வகைகளையும் பல காலமாகவே கூறி வருகிறோம். என்றபோதிலும் அவை, நம்முடன் வாழும் நமது தேசிய நண்பர்களுக்குப் பிடிப்பதில்லை. பிடிக்காததுமட்டுமல்ல, எட்டிக்காய்போல் கசக்கிறது; கசப்பதுமட்டுமல்ல, இப்படிக் கூறும் எம்மைக்கண்டால் கிண்டலும்கேலியும் பேசத் தொடங்கிவிடுகிறார்கள். அகண்ட இந்தியாவில் விரிந்து பரந்து கிடக்கும் ஒற்றுமையைச் சரியவைக்கப் பார்க்கிறார்கள் இவர்கள் என்றுநம்மைத்தூற்றவும் தவறுவதில்லை. நாட்டைத்துண்டு போடும் நாசவேலையைத் தவிர வேறெதுவும் இவர்களுக்குத் தெரியாதென்று நாத்தழும்பேறப் பேசாத தேசியவாதி கிடையாது—எழுதாத தேசிய ஏடு கிடையாது.

ஆனால் இப்போது நிலைமை என்ன?

வருத்தம் தெரிவிக்கிறார்கள். யாருக்கு?

"திராவிடப்பெருங்குடிமக்களே! உங்களைப் பற்றித் தவறாக எண்ணிவிட்டோம். உங்களுடைய இயக்கம் மேற்கொண்டுள்ள குறிக்கோளை— இலட்சியத்தை இழிவாக மதித்துவிட்டோம். இப்போதுதான் உண்மையை உணருகிறோம்" என்று நம்மிடம் நேரடியாக வருத்தம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறதா? அது தான் அவர்களுடைய அகராதியிலேயே கிடையாதே! நல்லது செய்கின்றவனையே பொல்லாதவன் என்று கூறுவதுதானே அவர்களின் குறிக்கோள். திராவிடநாடு திராவிடருக்கே என்றால் எலிவளைகள் எலிகளுக்கே என்று ஏளனம் பேசுபவர்கள் தானே அவர்கள். அப்படிப்பட்ட 'அறிவாளி'களிடமிருந்து நல்லசொற்களை எப்படி எதிர்பார்க்க முடியும்! என்றாலும் இப்பொழுது வருத்தம் தெரிவிக்கிறார்கள். நம்மைப்பார்த்து அல்ல. எந்த டில்லியின்பிடி நமக்குக் கூடாதென்று கூறினேமோ அந்த டில்லியைப் பார்த்து வருத்தம் தெரிவிக்கிறார்கள். நீங்கள் செய்கின்ற காரியங்கள் நல்லாயில்லை என்று டில்லியைப் பார்த்து வருத்தம் தெரிவிக்கிறார்கள். "நீங்கள் செய்து கொண்டு போகிற காரியங்களைக் கவனித்தால், ஒருவேளை, திராவிடநாடு திராவிடருக்கே ஆய்விடுமோ என்று அஞ்சுகிறோம் — அதனாலேயே வருத்தமும்படுகிறோம்" என்று டில்லியை நோக்கிக் கூறுவதுபோல் இருக்கிறது, அவர்களுடைய வருத்தம் தெரிவிக்கும்முறை.

முறை எதுவாகவேனும் இருக்கட்டும். அவர்களும் வருத்தம் தெரிவிக்கிறார்களே — தெரிவிக்கும் நிலை உண்டாகிவிட்டதே என்பதைக் காணும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அன்பர் ஆச்சாரியாரிலிருந்து அவரைக் கட்டிக் காக்கும் ஏடு தாங்கிகள்வரை எல்லோருமே டில்லியை நோக்கி வருத்தம் தெரிவிக்கும்நிலை ஏற்பட்டுவிட்டதைக் காண நமக்கு மேலும் மேலும் மகிழ்ச்சியே உண்டாகிறது. நம்முடைய இலட்சியம் நிறைவேறும் காலம் நெருங்குகிறது என்பதற்கு இவர்களின் 'வருத்தம் தெரிவிப்பு' ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

*

முன்னூறு ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் உயர்தர அதிகாரிகளுக்குப் பத்துச் சத விழுக்காடு சம்பள வெட்டுச் செய்ய உத்தேசித்த சென்னை சர்க்கார், தன்னுடைய அதிகாரத்துக்குள்ளிருக்கும் உயர்தர அதிகாரிகளுக்கு அந்தச் சம்பள வெட்டைச் செய்துவிட்டு, டில்லியின் அதிகாரத்தின் கீழ் சென்னை மாகாணத்திலிருந்து அலுவல்பார்க்கும்உயர்தர அதிகாரிகளுக்கும் சம்பள வெட்டுச் செய்ய அனுமதி கேட்டது. இதனை டில்லி சர்க்கார் மறுத்து விட்டது. உடனே இங்குள்ள தேசிய ஏடுகளுக்குக் கோபம் வந்து விட்டது. சென்னை கேட்டதை டில்லி மறுத்து விட்டதே என்ற துக்கம் ஏற்பட்டதும், எடுத்தது பேனாவை! தீட்டிற்று ஒரு தலையங்கம்!

"வருந்தத்தக்கது" என்ற தலைப்புடன் தீட்டிய தலையங்கம் இருக்கிறதே, அதைப் படித்துப் பார்த்தால், டில்லிமீது அந்த ஏட்டுக்கு எவ்வளவு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டிருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது. "டில்லியே! உன் பிடியிலிருந்து சென்னையை விடுவிக்கிறாயா? இல்லையா?" என்று கேட்பதுபோல் இருக்கிறது, அந்தத் தலையங்கம்.

இதோ அத்தலையங்கத்தின் சில முக்கிய பகுதிகள்:

"சென்னையின் நிதி நிலைமையைப்பற்றி எடுத்துச் சொல்வதற்காக இரண்டு அதிகாரிகள் டில்லிக்குப் போயிருந்தபோது, மத்திய சர்க்கார் சென்னைக்கு ஹிதோபதேசம் செய்தார்கள். செலவுகளைக் குறைத்துச் சிக்கனம் செய்யுங்கள்என்றுடில்லியில் சொன்னார்கள்என்று ஒருசெய்தி வந்தது. ஆனால், சிக்கனம் என்ற வார்த்தைக்கு இந்திய சர்க்காரின் வியாக்கியானம் எல்லாருக்கும் தெரிந்த அர்த்தத்திலிருந்து மாறுபட்டதாய் இருக்குமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் தங்களுடைய செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காகச் சென்னை சர்க்கார் சமர்ப்பித்த சில யோசனைகளை அவர்கள் நிராகரித்திருக்கமாட்டார்கள். முன்னூறு ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் சிப்பந்திகளுக்குப் பத்துச் சத விகிதம் சம்பள வெட்டுச் செய்ய வேண்டுமென்று சென்னை தீர்மானித்தது. தங்கள் நிர்வாகத்தின்கீழ் உள்ள சிப்பந்திகளின் விஷயத்தில் இந்த உத்தரவைச் சென்னை சர்க்கார் ஏற்கெனவே அமுலுக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆனால், அகில இந்திய சர்வீஸ்களைச் சேர்ந்தவர்களுக்குச் சம்பளவெட்டுச் செய்ய வேண்டுமென்றால், டில்லியின் அனுமதியைப் பெறவேண்டும் ……… இந்த வெட்டுக்குச் சம்மதிக்கமுடியாதென்று இந்திய சர்க்கார் சாவகாசமாக இப்போது பதிலளித்திருக்கிறார்கள். இந்தச் சம்பளவெட்டினால் ஏற்படக்கூடிய மிச்சம் சில லட்சம் தானே என்று அவர்களுக்கு அலட்சியமாகத் தோன்றியிருக்கலாம். இராணுவஇலாகாவுக்கு மட்டும் வருஷம் நூறு கோடி செலவிடும் மத்திய சர்க்காருக்கு சில லட்சங்கள் என்பது 'வெறும் அல்பமாகத் தோன்றலாம். ஆனால், மத்திய சர்க்காரைப் போல் வசதிகள் இல்லாத ராஜ்ய சர்க்கார்களுக்கு இது பெரியவிஷயம்தான்……செலவுகளைக் குறைக்கும்படி உபதேசம் செய்யும் இந்திய சர்க்கார், அம்மாதிரி யோசனை ஒன்று வந்தபோது அதை நிராகரித்தது வருந்தத்தக்கது………"

என்ற சுடு பாணங்களோடு கூடிய ஒரு தலையங்கத்தை 21—6—53 ல் 'தினமணி' தீட்டியிருக்கிறது.

சென்னையைப் பொறுத்த மட்டில் டில்லி எவ்வளவு அலட்சியமாக இருக்கிறதென்பதனைத் 'தினமணி' ஆசிரியர் தம்முடைய தலையங்கத்தின் வாயிலாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"டில்லி சென்னைக்கு ஹிதோபதேசம் செய்கிறது"

'தினமணி' எழுதுகிறது இப்படி! டில்லியின் அதிகாரத்தைச் சென்னை விரும்பவில்லை என்பது தானே 'ஹிதோபதேசம்' என்ற சொல்லை அந்த வாசகத்தில் புகுத்தியதன் நோக்கம். சென்னையைப் பார்த்து டில்லி உபதேசம் செய்வதா? இது அடுக்குமா? இந்த நிலை ஏற்படலாமா? என்றெல்லாம் கேட்பது போல் இருக்கிறது அந்த வாசகம். 'ஹிதேபதேசம்' என்ற சொல்லை எங்கெங்கு பயன்படுத்தினால், என்னென்ன பொருளைத்தரும் என்பதனை நன்குணரவல்லோர் தினமணியாரின் உட்கருத்து எதுவென்பதனை எளிதாய்ப் புரிந்துகொள்வர். 'ஹிதேபதேசம்' என்ற சொல்லை நல்லமுறையிலும் பயன்படுத்தலாம். கிண்டலாகவும் பயன்படுத்தலாம். ஆனால் அந்தச் சொல், இங்கு ஆத்திரமும் கிண்டலும் கலந்து பயன்படுத்தப்பட்டிருப்பது நன்கு தெரிகிறது.

ஒரு சர்க்கார், அதாவது ஜனநாயக சர்க்கார்தன் ஆளுகைக்குக்கீழ் இருக்கும் இன்னொரு சர்க்காருக்கு ஒருபோதும் உபதேசம் செய்யாது. யோசனைதான்கூறும். அந்தயோசனை உத்தரவு என்ற வடிவில் வருமேயொழிய ஒரு போதும் உபதேசம் என்ற வடிவில் வரவே வராது. 'உபதேசம்' என்ற சொல் அரசியல் அகராதியில் சேர்க்கப்படாத ஒரு சொல். ஆசிரமவாசிகளின் அகராதியில் இருக்கவேண்டிய சொல். குரு சீடனுக்குச் செய்வது உபதேசம். ஒரு சர்க்கார் இன்னொரு சர்க்காருக்குக் கூறுவது யோசனை அல்லது உத்தரவு. ஜனநாயக சர்க்கார் என்றால் யோசனை கூறும். எதேச்சாதிகார சர்க்கார் என்றால் உத்தரவு பிறப்பிக்கும். இந்த இரண்டு முறைகளையும் கடந்து உபதேசம்செய்யும் கட்டத்திற்குச் செல்பவரை அரசியல்வாதி என்று எந்த அறிவுப்பஞ்சம் ஏற்பட்டவர்களும் கருதமாட்டார்கள்.

உபதேசம்! அல்ல, ஹிதோபதேசம் என்று கிண்டல் செய்கிறது 'தினமணி' இதன் பொருளைத் தேசிய அன்பர்கள் சிந்திப்பார்க்க வேண்டாமா?

மேலும், 'தினமணி'யார் கூறுகிறார், மத்திய சர்க்காருக்குச் சிக்கனம் என்றசொல்லுக்கே பொருள் தெரியாது என்பதாக. இது, எந்த அளவுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது தினமணி ஆசிரியருக்கு என்பதனை நன்கு எடுத்துக் காட்டுகிறது. சிக்கனம்! இந்தச் சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை மத்திய சர்க்காருக்கு! தெரிந்தாலும், அது, மற்றவர்களுக்குத் தெரியும் பொருளிலிருந்து மாறுபட்டுத் தெரிகிறதாம். இதோடு நிற்கவில்லைத் 'தினமணி'யார்.

மத்திய சர்க்காரால் இராணுவத்திற்காகச் செலவிடப்படும் நூறு கோடி ரூபாய் வீண் என்றும் பயனற்றதென்றும் கூறிக் கண்டிக்கிறது.

> இராணுவ இலாகாவுக்குமட்டும் வருஷம் நூறுகோடி செலவிடும் மத்திய சர்க்காருக்கு சில இலட்சங்கள் என்பது 'வெறும் அல்பமாக'மாகத் தோன்றலாம்.

என்று எழுதுவதன் வாயிலாக மத்திய சர்க்காரின் இராணுவச் செலவைக் கண்டிக்கிறது. 'தினமணி'யார்மட்டுமல்ல, அன்பர் ஆச்சாரியார்கூட அண்மையில் மத்திய சர்க்காரின் இந்த இராணுவச் செலவைக்கண்டித்துப்பேசியுள்ளார். இந்தியா போன்ற ஒரு நாடு இராணுவத்துக்குமட்டும் நூறு கோடி செலவிடுவதை அறியாமையும் ஆணவமும் நிரம்பியது என்று அரசியலறிவு பெற்ற அனைவருமே கண்டிக்கின்றனர். என்றபோதிலும் டில்லி அந்தத்துறையில் 'தாராள' மனப்பான்மையுடன் நடந்து வருகிறது. மற்றவர்கள் ஏதாவது உதவியோ சலுகையோ கேட்டால் மட்டும் சிக்கனத்தைக் கையாளும்படி 'உபதேசி'க்கிறது.

இதனை இப்போது வெறுக்கிறார் — கண்டிக்கிறார் தினமணியார். நாம் பலகாலமாகவே கூறிவருகிறோம், டில்லியின் பிடியில் நாம் (திராவிடம்) சிக்கியிருக்கும் வரையில் நமக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதாக. இதனை உணர மறுக்கும் தேசிய அன்பர்கள் 'தினமணி'யாரின் தலையங்கத்தை மீண்டும் ஒருமுறை முடித்துப் பார்த்து நிலைமையைப் புரிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். டில்லியின் பிடிப்பும் பிணைப்பும் நமக்கு எவ்வளவு இன்னல்களையும் தொல்லைகளையும் மேலும் மேலும் உண்டாக்கிக் கொண்டிருக்கும் என்பதனை இனிமேலாவது, நம்முடைய இலட்சியத்தை ஏளனம் செய்யும் அன்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். டில்லியின் போக்கைக் கண்டு வருத்தம் தெரிவிக்கும் 'தினமணி'யார் உட்பட எடுத்ததெற்கெல்லாம் டில்லியை நோக்கித்தவம் கிடக்கும் அரசியல் தலைவர்கள் — அவர்களின் ஆதரவாளர்கள் அனைவருமே இதனை ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம்.

தென்னாடு தமிழ் துள்ளி விளையாடும்
திரைக் காவியம்

திரும்பிப் பார்!

[நூல் வடிவில்]

கதை, வசனம்:
மு. கருணாநிதி
கலைஞரின் முன்னுரையுடன்
கூடியது.
விலை ரூ 0—10—0
விற்பனைக் கழிவு 25%
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம், திருச்சி.

வெட்கப்பட வேண்டாமா?

புதுக்கோட்டையிலுள்ள கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான நடைபாதைகளைத் தாங்களாகவே உண்டாக்கிக்கொள்கின்றனர் என்ற ஒரு செய்தி பத்திரிகைகளில்காணப்படுகிறது. பதினொரு கல் நீளமுள்ள நடைபாதையை (ரஸ்தாவை) கிராம மக்கள் தங்களுடைய சொந்த முயற்சியாலேயே போடுகின்றனராம். ஒரு கிராமத்துக்கும் இன்னொரு கிராமத்துக்கும் தொடர்பை உண்டாக்கும் நடைபாதைகளைப் போடுவது போற்றத்தக்கதுதான். கிராம மக்கள் ஒருவரோடொருவர் தொடர்புகொண்டு நட்புறவுடன் வாழ்வதற்கு இத்தகைய நடைபாதைகள் நல்ல உதவி செய்வதாக அமைகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். ஒரு கிராமம் இருந்தால், அந்தக் கிராமத்தைப்போய் அடைவதற்கு ஒரு நடைபாதை இருக்கவேண்டியது மிக மிக இன்றியமையாததுதான். அந்தக் காலத்தில், 'ஒற்றையடிப் பாதை' 'கொடிவழி' என்ற பெயர்களுடன் மக்கள்மட்டும் நடந்து செல்வதற்கு ஏற்ற, ஆனால் காடும் முரடும், மேடும் பள்ளமும் உள்ள நடைபாதைகளே இருந்தன. ஆனால் அப்பாதைகள் யாருடைய முயற்சியாலும் உண்டாக்கப்பட்டவையல்ல. அவையெல்லாம் மக்களின் நடமாட்டத்தினால் ஏற்பட்ட இயற்கையான நடைபாதைகள்.

இந்தக்காலம், அந்தக்கால நடைபாதைகளை வைத்துக்கொண்டு எந்தக் காரியத்தையும் செய்துவிட முடியாது. புதுக்கோட்டையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போக முன்பெல்லாம் இரண்டுநாட்கள் தேவைப்பட்டன. இப்போது இரண்டுமணி நேரம் போதும் — இல்லை, இதுவே அதிகம் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் காலமும் கருத்தும் மாறி அதற்கேற்பப் புதுப் புதுக் கருவிகள் (போக்குவரத்தை விரைவுபடுத்தக்கூடிய சாதனங்கள்) உண்டாகிவிட்டன. இந்தச் சாதனங்களை வைத்துக்கொண்டு, அந்தக்கால நடைபாதைகளில் போகமுடியாது. எனவேதான் இந்தக் காலத்தில் நடைபாதைகள் நல்லமுறையில் அமையவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

ஆனால், இந்த விருப்பத்தைநிறைவேற்றுவது யார்? மக்களா? அரசாங்கமா? மக்களின் நன்மைக்காக அரசாங்கம்தான் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். இது அரசியல்விதி. மக்களிடமிருந்து அரசாங்கம் வரி வசூலிக்கிறதென்றால், அது எதற்கு? மக்களுக்குத் தேவையான நன்மை பயக்கக்கூடிய நடைபாதைகள், மருத்துவ விடுதிகள், கல்விக்கூடங்கள் போன்ற நல்ல காரியங்களைச் செய்வதற்காகவே அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து வரிவாங்குகிறது. என்றபோதிலும், புதுக்கோட்டைக் கிராம மக்கள், தங்களுக்குத் தேவையான நடைபாதைகளைத் தாங்களாகவே — தங்கள் முயற்சியாலேயே போட்டுக்கொள்ளுகிறார்களாம். இது அரசாங்கத்துக்கு ஒரு வெற்றி என்று பலரும் எண்ண வேண்டுமென்ற முறையில், இச்செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன.

"புதுக்கோட்டைக் கிராம மக்களின் உதாரணம்"

என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புப் போட்டுப் பெருமிதத்தோடு இச் செய்தியை வெளியிட்டிருக்கின்றன. ஆனால், இந் நிகழ்ச்சி அரசாங்கத்துக்குத் தோல்வியா? வெற்றியா? தான் செய்யவேண்டிய — செய்யக் கடமைப்பட்ட ஒரு காரியத்தை இன்னொருவர் செய்யக்கண்டால், அது எந்த அளவுக்கு அவமானத்தை உண்டாக்குமென்பது, அதனைச் செய்யக் கடமைப்பட்டவருக்குத்தான் மற்றவர்களைவிட அதிக அளவில் தெரியும். தான் செய்யவேண்டிய காரியத்தை — தான் செய்யத் தவறிவிட்ட காரணத்தால் வேறொருவர் செய்கிறார் என்றால், அதைவிடக் கேவலமும் அவமானமும் வேறொன்றும் இல்லை. அதிலும், "நான் உனக்காக இன்ன காரியத்தைச் செய்வதற்கே உன்னிடமிருந்து இத் தொகையைப் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று கூறிப் பணத்தை வாங்கியவர் அந்தக் காரியத்தைச் செய்வார்—இப்பொழுதில்லாவிட்டாலும் இன்னும் சில காலம் பொறுத்தாவது செய்வார் என்று எதிர்பார்த்து ஏமாற்றமும் வேதனையும் அடைந்த நிலையில், எந்தக் காரியத்துக்காக எவர் பணம் கொடுத்தாரோ, அவரே அந்தக் காரியத்தைச் செய்வதைக் காணும்போது, அதனைச் செய்து தருவதாகக் கூறிக் காசு வாங்கினாரே, அவருக்குக் களிப்பா உண்டாகும்? வழிபறி கொள்ளைக்காரனுக்கன்றி வேறெவருக்கும் இப்படிப்பட்ட சம்பவம் களிப்பை உண்டாக்காது. தலை குனியும் அளவுக்கு வெட்கமே இச் சம்பவத்தால் உண்டாகும்.

ஆனால், 'நம்ம சர்க்கார்' இருக்கிறதே! அது இப்படிப்பட்ட காரியங்களைத்தான் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

"சர்க்காரே பொது மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்துதரும் என்று எதிர்பார்க்கக் கூடாது. பொதுமக்களாகிய நீங்களும் சில காரியங்களைச் செய்யத்தான்வேண்டும்."

என்பது நம்ம சர்க்காரின் அரசியல் ஏட்டின் ஆரம்பப் பல்லவியாகும். வெள்ளைக்காரனிடமிருந்து அரசியலைப் பெற்றவுடன், தங்களுக்கென ஏற்படுத்திய அரசியல் ஏட்டின் முதல் பல்லவியாக, நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் வாசகத்தையேஎழுதிவைத்துக்கொண்டது.

என்ற போதினும், வெள்ளைக்காரன் எந்தெந்தக் காரியங்களுக்காகப் பொதுமக்களிடமிருந்து வரி வசூலித்தானோ, அதைவிட இப்போது அதிக அளவில் வரி வாங்கும் நம்ம சர்க்கார், வெள்ளைக்காரனே பார்த்து எள்ளி நகையாடும் அளவுக்குப், பொதுமக்களின் வரிப்பணத்தைப் பொதுமக்களின் நன்மைக்காகச் செலவிடாமல் பாழாக்குகிறது.

பொதுமக்களின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றான நடைபாதைகளைக்கூடப் பொதுமக்களே போட்டுக்கொள்ளவேண்டுமென்று, ஒரு சர்க்கார், அதிலும், வெள்ளைக்காரனின் கொடுங்கோலுக்காளாகியிருந்த மக்களை மீட்ட சர்க்கார் விரும்புகிறதென்றால், இதைவிட வெட்ககரமான காரியம் வேறேதாவது இருக்க முடியுமா? சிந்தித்துப் பாருங்கள் தேசிய நண்பர்களே!

"அப்பாவிகள்!"

ஆண்டவனின் மகிமையை விளக்க, வக்காலத்து வாங்கப் புறப்பட்டிருக்கும், விசித்திர உருவங்களை எண்ணும் போது, வேடிக்கையாக இருக்கிறது.

கடந்தவாரம், 'தினமணி' இதழ் தலையங்கம் ஒன்று தீட்டிற்று— 'அடுத்தவாரம் சென்னைமாகாணத்தில் மழைபெய்யலாம்' என்கிற வானிலை ஆராய்ச்சியாளர் விடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு.

எல்லாப் பத்திரிகைகளும் இந்தச் செய்தியைப் பிரமாதமாகப் பிரசுரித்திருந்தன.

இந்தச் செய்திகளைக் கண்ட பல்லாவரம் பக்தர்களின் மூளை, கொஞ்சம்வேலை செய்திருக்கிறது!— பக்தியைக் குறைகூறும் 'பதர்'களுக்குப் பாடம் கற்பிப்பதற்காக, எங்கோ சென்று ஆச்சாரியார் ஸ்வாமிகள் ஒருவரை அழைத்து வந்து 'வருணஜபம்' செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்!

மழை பெய்தால், வருணஜபத்தின்பலன்! — என்றுகூறிக்கொள்ளலாமல்லவா?

ஆண்டவன் பெருமையைக் காக்க முனையும் இந்த அப்பாவிகளை எண்ணினால், 'ஐயோ, பாவம்!' என்கிற பரிதாபமே, உருவாகிறது.

அறிவிப்பு

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகளில் தொண்டர் படையில் சேர்ந்து தொண்டாற்ற விரும்புகின்ற தோழர்கள் அந்தந்த ஊர் கழக செயலாளரின் அனுமதி சீட்டுப் பெற்றுக் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்து பதிவு செய்துகொள்ளவும்.

மாநாட்டின் அலுவலகம்
லால்கான் தெரு
சாகப்கனிசாகிப் கட்டிடம்
ரூம். நெ. 6.
சிதம்பரம்

ஏன் கேட்கிறோம்?

[உடுமலை சதாசிவம்]

[திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும் என்ற வேட்கை இளைஞர் உள்ளங்களில் எவ்வளவு ஆர்வத்துடன் பதிந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட இந்தக் கட்டுரை பயன்படுகிறது. (ஆ-ர்.)]

நல்வளம் செழித்த நாடுதான் நம்முடையது! ஆனால் இன்று நடைபாதைகளிலே பசியால் துடித்துத் துவண்டு பிடி சோற்றுக்கும் வகையற்று பிணக்குவியல்களாகக்குவிந்து கிடக்கின்றன மனிதக்கூடுகள்! எண்ணற்ற மக்கள் ஏழைகளாக, பராரிகளாக, பஞ்சைகளாக உழைக்கத் தொழிலுமின்றி உண்ண உணவுமின்றி ஊர் ஊராகத் திரிகின்றனர். திண்டாடுகின்றனர்! இதை ஏன் என்று கேட்கத் திறன் இல்லாத திம்மண்ணுக்கள் மந்திரியெனும் பதவிப்பீடங்களிலே மந்தகாசமாகப் பொழுதைப் போக்கி வருகின்றனர். பொய்யாகச்சில திட்டங்களை மக்கள் மன்றத்திலே காண்பித்துவிட்டு நாங்கள் எடுத்தகாரியம் முடியட்டும், பிறகு வேண்டுமானால் உங்கள் பசியைக் கவனிக்கலாமென்று பஜகோவிந்தம் பாடுகிறார் பகவத்கீதை பாராயணர் இராசகோபாலாச்சாரியார்!

தென்னாடு நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே வருகிறது. ஆனால் தெவிட்டாத தேன்சுவையை வடநாடு சுவைத்துக்கொண்டே இருக்கிறது! இதை ஏன் என்று எடுத்துக்காட்டி எதிர்த்துக்கேட்க எவரும் எந்தக் கட்சியும் துணியவில்லை.

தவறான பாதையில் செல்கின்றீர்கள்; உலக உத்தமர் காந்தியார் பெயரைச் சொல்லிப்பெரும் பெருச்சாளிகளாகாதீர்கள் என்று சுட்டிக்காட்டித் தட்டிக்கேட்கும் பணியைத் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக்கழகமும்தான் நடத்தி வருகிறது.

தன் தாய்மொழிக்காகத் தம் உயிரைக்கொடுத்த தாலமுத்து நடராசன் போன்றவர்களை இந்த மண்ணுக்குப் பலிகொடுத்திருக்கிறோம். மேலும் தோழர் மஜீத், பாண்டியன் இவர்களின் இரத்தத்தையும்காணிக்கையாகக் கொடுத்திருக்கிறோம். தேனியிலே தமிழ்மொழித் தென்றலை அனுபவிப்போம், தெவிட்டாத மதுரகீதத்தைக் கேட்போமென்று எண்ணி எண்ணற்ற மக்கள் மாபெருங்கூட்டமாக மதியரசு நெடுஞ்செழியனுக்காகக் காத்திருந்தனர். மதியிலே மந்தகாசம் பொங்க அதரங்களிலே அன்புப்புன்னகை நர்த்தனமாட, பேச்சுமேடையைநெருங்கிக்கொண்டிருந்த தோழர் நெடுஞ்செழியனின் தலையைப் பிளக்கத் திட்டமிட்டனரே சில தேசியவாதிகள்!

இதைவிட வேறு கொடுமைதான் என்ன உளது?

தேனிக்குவந்த மக்கள் தமிழ்ச்சுவைத் தென்றலை அனுபவிக்கவில்லை! புயலைக் கண்டனர். புல்லர்களால் தடியடிபட்டனர். தாக்குண்டனர் இரத்தவெள்ளத்தைக் கண்டனர்.

காந்தியப் போர்வை காலிகளை மறைத்து மாபெருங் குற்றங்களைச் செய்யத் துணைபுரிகிறதென்றால் இதைவிட—வேறு இழிவானபோக்கை வேறு எங்கும் காணமுடியாது. வெறுக்கத்தக்க செயல்! வெட்கக்கேடான ஆட்சி!!

டில்லி சர்க்காரோ இந்நாட்டு நிபுணர்களை விட்டு செல்வம் கொழித்த அமெரிக்கா தேசத்து நிபுணர்களை வரவழைத்து கஜானாப் பணத்தை வாரி வாரி அவர்களுக்கு மாதச் சம்பளமாகக் கொடுத்துப் புதிய புதிய அணைக்கட்டுகள், ஆலைத்தொழிற்சாலைகள்; இரசாயன ஆராய்ச்சிசாலைகள்; தோல் பதனிடும் தொழிற்சாலைகள்; இப்படிப் பல் வேறு திட்டங்களை நிறைவேற்றுகின்றனர்

இவைகளெல்லாம் எங்கே கட்டுகிறார்கள் என்று கேட்கிறீர்கள்!

சர்வ திட்டங்களும் வடநாட்டில் தான்!

நாம் கொடுக்கும் பணத்தில்தான் அங்கு பல திட்டங்கள் உருவாகின்றன. களிப்புக் கூடங்கள் கங்கைக் கரையிலே! கஞ்சித் தொட்டிகள் இங்கே?

பஜாஜிக் கூட்டங்கள் பண மாளிகைகளை அங்கு எழுப்புகின்றனர். ஆனால் இந்த அருமைத் தென்னாட்டில் மக்கள் எழுப்புவதோ மரண மாளிகை!

மரக்கிளைகளிலே பிணங்கள்!! குளம் குட்டைகளிலே மிதக்கும் சடலங்கள்!!

நடைபாதைகளிலே வறுமையால் வாடிவதங்கிப்போய் நடக்கக் கூடச் சக்தியற்றுச் சோர்ந்துவிழும் நடைப்பிணங்கள்!

இந்தக் கொடுமைகளைக் களைய ஓர் வழி காணவேண்டும். கோணலாட்சியை நிமிர்த்த வேண்டும். கொள்ளைக்காரனை நம் எல்லைக்கு அப்பால் விரட்டி அடிக்கவேண்டும்.

நமக்கென்றோர் நாடு வேண்டும். நம்நாடு என்றோர் எல்லைக்கோடும் வேண்டும். அதில் நம் இனம் மனிதனாக வாழவேண்டும். மாடுகளாக அல்ல!

உழைக்கவேண்டும் அடிமைகளாக அல்ல!

இக் காரணங்களுக்காகவே நம் நாட்டை நாம் கேட்கிறோம்—திராவிடநாடு திராவிடருக்கே ஆக வேண்டுமென்று கூறுகிறோம்.

★

[ஒரு கனவு!]

தவிக்கும் தாய்

அலைகள், அடித்துக்கொண்டிருந்தன — அந்தப் பேரொலியின் கூச்சலைக் கடந்து குமுறல் ஒன்று கேட்டது. விம்மல்! பெருமூச்சு! விழி நிறைந்த கண்ணீர்! நீலத்திரை புடுத்திய தாய் வந்துகொண்டிருந்தாள். நிமிர்ந்து பார்த்தேன்! அழுதாள், அத்தாய்!! அவளது கண்களிலிருந்து, கண்ணீர்த் துளிகள், உருண்டோடிக்கொண்டிருந்தன — தரை மீது. தரையிலோ, சின்னஞ் சிறு குழந்தைகள், விளையாடிக் கொண்டிருந்தன. அந்தத்தாய் சிந்தும் கண்ணீர்த் துளிகள் தரையில் விழவிழ நான் தவித்தேன் — அந்தக் குழந்தைகளோ, தரையில் சிந்தும் துளிகளை, முத்துக்களெனக் கருதி, அவைகளை ஏந்தி விளையாடிக் கொண்டிருந்தன! 'சின்னஞ் சிறுசுகள்!' — என, சிந்தை நொந்தவண்ணம், சொல்லிக்கொண்டேன், தாயோ, கலங்கியவாறு நின்றாள்! குழந்தைகளைச் சுட்டிக்காட்டினாள் — பார்த்தேன் — அவைகளின், தலையில், அழகான 'ஜரிகைக் குல்லாய்'கள் காட்சியளித்தன!!

*

'ஐயோ' — என்றலறல்; என்னைத் தூக்கிவாரிப்போட்டது. தாய், நடுங்கிக்கொண்டிருந்தாள் — காலைச் சூரியன் புறப்படும்போது கடல் தென்படுகிறதே — அதுபோல, அவளது உடலெங்கும் உதிரம் வழிந்துகொண்டிருந்தது — நீல ஆடையை நனைத்தவண்ணம், தரையில் வழிந்துகொண்டிருந்த, இரத்தத்தைக்காண, துடித்தேன், நான்! அலறியவாறு — அந்தத்தாய் ஆகாயத்தைக் காட்டினாள். கோரச் சிரிப்புடன் குதித்துக்கொண்டிருந்தது ஒரு உருவம்! கொழுகொழு வென்று, கொழுத்த உடல் — மேனியெல்லாம் பளபளப்பு — கண்களோ, கோவைப்பழம்போல — பற்களிலே, தசைகளைக் கிழித்தெறிவதால் ஏற்பட்ட வெறி — திகைத்தேன், நான். தாய், கதறினாள். தாக்க, ஓடினேன், அந்தக் கொடுமைக்காரனை! தரையில் விளையாடிக்கொண்டிருந்த 'குழந்தைகள்' என் கால்களைப் பிடித்துக்கொண்டன — என் செய்வது? சினத்தோடு, அவைகளைப் பார்த்தேன்! சிறு குழந்தைகள்!! தாயின் உடலிலிருந்து கொட்டும், இரத்தம், மண்ணில் விழுவது, இரத்தினங்கள்போல் காட்சிதந்தது போலும் — இரத்தத் துளிகளைக் கையிலேந்தி, விளையாடிக்கொண்டிருந்தன! தாய் — சுட்டிக்காட்டினாள் — பார்த்தேன் — அவைகளின் தலையில், 'தர்க்குல்லாய்'கள் காட்சி அளித்தன!

*

"அழிந்தேன்! இனி, வாழேன்!!" — என்று, தாய் கூவிக்கொண்டிருந்தாள் — சாட்டையேந்திய ஒரு ஆள் அவளைத் தாக்கிக்கொண்டிருக்கக் கண்டேன். சதை பிய்ந்தது! சேலை, கிழிந்து தொங்குகிறது! கதறினாள் — அழுதாள் — அடித்தாள். என், செய்வேன் நான்? சாட்டை தாங்கிய ஆளைப் பார்த்தேன் — சாட்டையும் சாதாரணச் சாட்டையல்ல! அந்த ஆள், தரைமீதும், நிற்கவில்லை — அழகான குதிரைமீது அமர்ந்திருந்தார் — அந்தக் குதிரையின் சேணத்தில், பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களைக் காட்டினாள், அத்தாய் — 'அதிகாரம்' என்று குறிக்கப்பட்டது. அதிகாரக் குதிரையேறி, அடாத செயல்புரியும், ஆசாமியாரெனத் துடித்தேன். அந்த ஆளைப் பார்த்தேன் — கூர்ந்து கூர்ந்து பார்த்தேன். அந்த ஆளின் குரல் ஒலி, இப்போது, நன்றாகக் கேட்டது! ஏனெனில், தாய், சவம் போலானாள் — சிறு குழந்தைகளோ, 'சாட்டை வீசும்' அழகைக்கண்டு, ரசித்துக் குதித்துக்கொண்டிருந்தன. சாட்டை வீச்சோ, என்னை நெருங்கவிடவில்லை! இந்நிலையில் அந்த ஆசாமியின் குரலொலியைக் கேட்டேன் - கூறிக்கொண்டிருந்தது, அந்த ஆசாமியின், வாய். நானே கடவுள்! நானே சர்க்கார்! நானே சட்டம்! — என்பதாக, குழந்தைகள், கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன! குருதி, கொதித்தது எனக்கு!!

*

'ஐயோ! ஐயோ!!' என்ற பேரொலி — அந்தத் தாயின்மீது, கழுகுகள் பலபாய்ந்துகொண்டிருந்தன — வல்லூறுகள் பல வட்டமிட்டுக்கொண்டிருந்தன. கதறினாள்! நான் பதறினேன். பாய்ந்தோட முயன்றேன் — குழந்தைகள், அந்த 'வேடிக்கை'யைக் கண்டு கை கொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன. எழுந்த என்னையும் விளையாட்டுக் கருவியாக்கின! மண்ணை அள்ளி வீசின — சில, ஓடிவந்து கால்களைப் பிடித்துக்கொண்டன — சிறுகுழந்தைகள்! என் செய்வேன்? இரக்கமெனும் ஒரு பொருளை இழக்கவில்லையே! தாண்டிச் சென்றால், தாயைக் காப்பாற்றலாம் — தாண்டாமல்தடுப்பதோ, 'தளிர்மலர்கள்' — தாயோ, கதறுகிறாள்! வல்லூறும் கழுகும், அவளைக் கொத்துகிறது — கடலோரத்தில் கிடக்கும் கருவாடுகளைப் பாய்ந்து கொத்துவதுபோல. 'தாயே!' — என்று கூவினேன். சுட்டிக்காட்டினாள் — அந்தக் குழந்தைகளின் தலையில் 'சட்டம் — அமைதி' என்று பொறிக்கப்பட்ட குல்லாய்கள் இருந்தன!!

*

விழித்துப் பார்த்தேன்! கடலலைகள் வழக்கம்போல ஒலித்துக் கொண்டிருந்தன. ஆதவனின் அஸ்தமனக்கிரணங்கள், அலைகளைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தன. கடலோரக் காற்றால், என் மார்மீது கிடந்த தின ஏடுகள் எங்கெங்கோ — சிதறிக்கிடந்தன. அவைகளில் நான் கண்ட, செய்திகள் — ஓடிவந்தன, நினைவுக்கு.

*

மீன் பிடித்துவாழும் ஏழைகள் 300 பேர், கடலில் வீழ்ந்து, உயிர் போகும் தருவாயில் மீட்கப்பட்டனர்.

*

பல்லாவரத்தில் கல்லுடைக்கும் தொழிலாளருக்கு விபத்து — இருவர், மரணம்.

*

ஆச்சாரியாரின் புதுக் கல்வித் திட்டம் — தஞ்சை, சேலத்தில் அமுல்.

*

ஆச்சாரியார் கல்வித்திட்டத்தை பி. டி. ராஜன் ஆமோதிக்கிறார்.

*

சென்னை சர்க்காரின் கோரிக்கையை, மத்யசர்க்கார் நிராகரித்து விட்டது — சம்பள வெட்டுப் பிரச்னையில்.

*

அச்சுத் தொழிலாளர் வெள்ளி விழாவில் பேசிய ஆச்சாரியார், 'என்னை மந்திரியாக நினைக்காதீர்கள் — கடவுள்தான், நான்!' என்று சொன்னார்.

*

இந்தச் செய்திகளைத் தொடர்ந்து படித்தால், எனக்குமட்டுமென்ன, உங்களுக்கும் 'தவிக்கும் தாய்' தோன்றுமலா போவாள்? நிச்சயம் தோன்றுவாள்! நெஞ்சத்தில் மட்டும் நிலைமையை அறியும், பண்பு இருக்கவேண்டும் — 'தாயைக்' காணும்போது, என்னைப்போல, அழுகையும் ஆத்திரமும் உங்களுக்கு வரும் — அப்போது? என் செய்வது! தாயின்நிலை, குழந்தைகளின் மனதில் படவேண்டுமே!! பட்டால், பட்டமரம் துளிர்க்கலாம் தாயையும் மீட்கலாம். அவர்கள் தான், வாழ்க்கையெனும் கடலோரத்தில், உல்லாசமாக 'விளையாட' கிளிஞ்சில் பொறுக்கும் வேட்டையிலீடுபட்டிருக்கின்றனரே!!

★

தடியடி தர்பார்

திருத்தணியில் அறப்போர் புரியும் தோழர்கள்மீது, போலீசார் தடியடி நடத்தினராம்.

ஆச்சாரியார் ஆட்சி, தடியடி தர்பாருக்குப் பிரசித்திபெற்றதென்றாலும், இம்முறை அத்தகைய கொடுரங்களில் அவர் ஈடுபடமாட்டாரென்றே, பலர் எண்ணிவந்தனர். ஏனெனில், 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு!' என்று அடிக்கடி போதிக்கிறாரல்லவா?

அந்த எண்ணத்தைத் தகர்க்கும் வகையில், தடியடியைத் துவங்கியிருக்கிறார்.

தோழர்கள், தெளிவாகத் தெரிவித்திருக்கின்றனர் — "எமது அறப்போர் சென்னையுடனல்ல! டில்லியுடன்!!" என்று. இருந்தும், இவரது போலீசார், தடியடி நடத்தியிருக்கின்றனர்.

'தமிழர்களுக்காகப் போராட வந்தவர்' — என்று சிலர், ஆச்சாரியாரைக் குறித்துப் பேசித் திரிவதோடு, 'திருத்தணி மறியலை'ச் சொல்லிக்கொண்டு, அவர் வீட்டையே 'வலம்' வந்துகொண்டும் உள்ளனரே, அவர்களைக் கேட்கிறோம், இதுவா, தமிழர்பால், உம் 'தலைவர்' காட்டும், அன்பு! ஆர்வம்!

யார் அடிப்பது?

"ஆறுமுகம்" என்று ஆத்திரத்தோடு, தன் மகனைக் கூப்பிட்டார் — குமரகோட்ட தர்மகர்த்தா, கோவிந்தசாமி முதலியார்.

"என்னப்பா?" என்று அடக்க ஒடுக்கமாக வந்து நின்றான், ஆறுமுகம் — அப்பாவின் எதிரில்.

"நேற்று, கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யச் சொன்னேனே, செய்தாயா?" என்று கண்களில் கனல் தெறிக்கக் கேட்டார் — முதலியார்.

"செய்தேனே அப்பா — சுப்பிரமணிய குருக்கள்தான், அர்ச்சனை செய்தார்" என்று சற்று சோகத்தோடு பதில் தந்தான், தனயன்.

"செய்தாயா, செய்வாயடா — இல்லை என்றுதான், அதே குருக்கள் என்னிடம் சொன்னாரே. சாமிக்கு அர்ச்சனை செய்யடா என்று பணம் கொடுத்தால், திருட்டுப் பயலே, சினிமாவுக்கா போய்விட்டாய், அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு; என்ன தைரியமடா உனக்கு" என்று ஓங்கி அறைந்தார், மகனின் கன்னத்தில் — முதலியார்.

"நாயே! நீ நாசமாய் போக! சாமிக்கு என்று கொடுத்த பணத்தை சினிமாவுக்கு எடுத்துச் செல்லலாமடா? சிவத் துரோகி, என் எதிரே நிற்காதே, ஓடிப்போ" என்று விரட்டினார்.

அடிபட்ட ஆறுமுகம் அழுது கொண்டே சென்றுவிட்டான். அன்றே காய்ச்சல் ஆரம்பித்து விட்டது, அவனுக்கு; கன்னமும் வீங்கிவிட்டது.

"சாமியைத் துரோகம் செய்தால் உனக்கு ஜுரம்மட்டுமா வரும், சாவே வரும்டா" — என்று குமுறிக் கொண்டிருந்தார், கோபம் தணியாத முதலியார்.

ஆறுமுகமோ அடியின் வலிதை தாங்காமல அலறிக்கொண்டிருந்தான் — இரண்டு மூன்று நாட்களாக.

இது நடந்து, ஒரு வார காலம் ஓடிவிட்டது.

ஒரு நாள் கோயிலிலே உட்கார்ந்துகொண்டு, வரவு செலவு

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக
இரண்டாவது சமூக சீர்திருத்த

அரசியல் மாநாடுகள்

சென்னையில் ஜூலை 11, 12, தேதிகளில் நடைபெறும்.

11—7—53 சனிக்கிழமை காலை 8-மணிக்கு

சமூக சீர்திருத்த மாநாடு

மாநாட்டுத் தலைவர்: திரு. எஸ். வி. லிங்கம், அவர்கள்
திறப்பாளர்: ஆர். பாலகுருசாமி அவர்கள்
(செயலாளர் தி. மு. க. தென்னாற்காடு மாவட்டம்.)
கொடி ஏற்றுபவர்: திருமதி பொருட்செல்வி இளமுருகு அவர்கள்
(திருச்சி மாவட்டம்)

12—7—53 ஞாயிறு காலை 8-மணிக்கு

அரசியல் மாநாடு

மாநாட்டுத் தலைவர்: திரு. சிவசண்முகசுந்தரம் அவர்கள்
(செயலாளர் தி. மு. க. இராமநாதபுரம் மாவட்டம்)
திறப்பாளர்: எஸ். வீரபாகு அவர்கள்,
(செயலாளர் தி. மு. க. நெல்லை மாவட்டம்)

இரண்டுநாள் மாநாட்டிலும் அறிஞர் அண்ணா அவர்களும் கழக பேச்சாளர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள். இரண்டு நாட்களிலும் நாடகம் உண்டு.

(மற்ற விவரம் அடுத்த இதழில் வெளிவரும்.)

கே. எம். கண்ணபிரான், வ. கு. தலைவர்.
அ. ஆர். சேஷாசலம், வ. செயசந்திரன், செயலாளர்கள்.

அலுவலகம்,
"அறிவகம்" இராயபுரம், சென்னை-13.

முகர்ஜி மறைவு

'அம்மா, தம்பி போய்விட்டான்'''
—என்றலற்ளுர், அண்ணன்.

தாய், தளர்ந்த குரலில் கேட்டார், "ஜெயிலிலிருந்தா?''

*

உலகச் சிறையிலிருந்தும், டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி, விடுதலை யடைந்துவிட்டார் என்கிற செய்தி, அவரது தாய்க்கு எட்டிய விபரம், இது.

'காஷ்மீரச் சிறையில் வாடுகிறுன் பையன்!' — என்றெண்ணிக்கொண்டிருந்த அன்னைக்கு, 'தம்பி போய் விட்டான்!' என்ற செய்தி எட்டினுல், இதைத் தவிர, வேறென்ன எண்ணியிருப்பார்?

எதிர்பாராத செய்தி அன்ருே, இது? — அன்னையாருக்கும், நாட்டுக்கும்.

ஜனசங்கத்தின் போராட்டத்துக்காகச் சென்றிருக்கிறுன், புதல்வன்—போன இடத்தில் 'கைது' செய்தார்கள்—'காவலில்' இருக்கிறுன்—என்றெண்ணிக் கிடந்த, முகர்ஜியின் அன்னை, மகன் இறந்த செய்தி கேட்டதும், மூர்ச்சித்து வீழ்ந்தாராம்!

'அப்பா — உயிரோடு போனீர்கள்? இப்போது, உயிர் எங்கேப்பா! ஒரு வார்த்தை சொல்லப்பா!!' என்று கண்ணீர் வடித்தனராம், முகர்ஜியின் குழந்தைகள்.

டாக்டர் சியாம பிரசாத முகர்ஜி, நமக்கு அறிமுகமானவரல்ல—நமக்கும் அவருக்கும், நெடுந்தூரம்.

எனினும், அவரைப்பற்றி, அதிகமாக அறிவோம்—டில்லியில் அமைச்சராக இருந்தாரென்பதால் மட்டுமல்ல, அவரது வாழ்க்கையில் அவர் செய்திருக்கிற செயல்கள்மூலம்.

அண்மையில், டில்லிப் பார்லிமெண்டில், பண்டித நேருவையே, மன்னிப்புக் கேட்கும்படி செய்தவர்—அந்தளவுக்கு அறிவாற்றலும், மனோதிடமும் மிக்கவர்.

வங்க மாதாவின் மடியில் பிறந்த ஒருவரை, காஷ்மீர் களத்துக்கு, இந்திய ஆட்சியினர் இரையாக்கி விட்ட சம்பவம், மிக மிகக் கேவலமாகும்.

முகர்ஜீ, காங்கிரஸ்காரராக யிருந்தவா மட்டுமல்ல—காங்கிரஸ் மந்திரி சபையிலும் இருந்தவர்—பல கஷ்ட நஷ்டங்களை, சுயராஜ்யப் போரின் போது ஏற்றவர் — ஒரு அருமையான வீரரின் மைந்தர்.

கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி அழிப்பது போதாதென்று, அவரையும் காஷ்மீரத்துக்கு இரையாக்கிவிட்டனர், நேரு சர்க்கார்.

காஷ்மீரத்தில், சியாம் பிரசாத் நுழைந்தார், ஒரு ஜீப்பில்! ஷேக் அப்துல்லாவின் அரசாங்கம் கைது செய்தது!!

ஏன்? 'பெர்மிட்' இல்லாமல், இவர், நுழைந்ததால்!

காஷ்மீரத்துக்கு இந்திய சர்க்கார் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கும்போது, இந்தியப் பிரஜை எனப்படுபவர், அங்கே செல்ல, 'பெர்மிட்' ஏன்?

நேரு, கேட்டிருக்கவேண்டும்—'நெருப்பு' பதிலாக வருமென்பதால் கேட்கவில்லை, அவர். இன்று, ஒரு உயிர் போய்விட்டது!

முகர்ஜியின் சாவுக்குக் காரணம் ஆயிரம் காட்டினுலும், இந்த இக்கட்டு உண்டானமைக்கு, யார் காரணமோ, அவர்களின் ஆட்சிமீது, உலகம் கேலிச்சொல் வீசும்!

'பெர்மிட் எங்கே?' என்று கேட்ட, ஷேக் அப்துல்லாமீது குறைகூற முடியாது.

அவரை அணைத்துக்கொண்டு கொஞ்சும் 'நேரு ஆசாத்' குழுவைதான், கேட்கவேண்டும்.

'நேரு ஆசாத்' குழுவின்போக்கு பிடிக்காததால்தான், முகர்ஜி, மேற்படி அறப்போரைத்துவக்கி, கைதானுராம்.

ஜன சங்கத்தின் நோக்கம், கிளர்ச்சிமுறை, இவைகளைப்பற்றி நமக்குக் கருத்துவேற்றுமையுண்டு. ஆனுலும், ஒரு நல்ல நண்பரை, இழக்குமளவுக்கு, நேருவின் ராஜதந்திரமும், கடமை உணர்ச்சியும், போய்விட்டதே என்பது குறித்து, எவரும் ஏளனம் செய்யவே செய்வர்.

இந்தியத் தலைவர்களின், 'சுயநலம்', ஒரு அறிஞனின் சாவில் கொண்டுபோய் முடித்துவிட்டது.

அனுதாபப்படுகிறோம். முகர்ஜி, வாழும்போதும், காங்கிரஸ் தலைவர்களின் போக்கைக் கண்டித்தார்—அவர் சாவும், காங்கிரஸ் ஏதேச்சாதிகாரச் சொரூபத்தை, வெளியுலகுக்கு உணர்த்தியிருக்கிறது.

அவரைப் போற்றுதார், இரார்.

முன்பக்கத் தொடர்ச்சி

கணக்குகளைக் கவனித்துக்கொண்டிருந்தார், கோவிந்தசாமி. கணக்குவேலை முடிந்ததும் கடிதங்களை எழுதிக்கொண்டிருந்தார்.

கடிதங்களை எழுதி முடித்தார்; கவர்களை ஒட்டவேண்டும். ஒட்டுவதற்கு ஒன்றுமில்லை; சுற்றுமுற்றும் பார்த்தார்—கோயில் ஆள் யாராவது கிடைத்தால் 'கோந்து' கொண்டுவரச் சொல்லலாம் என்று.

அந்த நேரத்திலே, கோயில் குருக்கள், வெளியே வந்துகொண்டிருந்தார், தம்முடைய பங்கு பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு.

"சாமி, இந்தாங்க!'' — என்ருர், முதலியார்.

குருக்கள் அருகே வந்தார் — ஏனோ அவர்முகம் வாட்டமடைந்து விட்டது.

"கவர் ஒட்ட, பிரசாதத்தில் கொஞ்சம் தாருங்கள்'' என்ருர்.

குருக்கள், குழைந்து நின்ருர்.

"ஏன் சாமி, கொடுக்கமாட்டீரோ'' என்ருர் தர்மகர்த்தா.

"இல்லை, நான் முன்பே என்னுடைய பிரசாதத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன் — இது அரிசி என்ருர், அய்யர்.

"அரிசியா? ஏது இது?''

"பேட்டை பொன்னம்பலம் கொடுத்தார் எனக்கு''

"ஏதோ காட்டும் பார்க்கலாம்''

அய்யர், பாத்திரத்தைக்கீழேவைத்தார். அதை தர்மகர்த்தா உற்று கவனித்தார். கோயிலுக்குப் பிரசாதத்துக்குக் கொடுத்த அரிசியே அங்கு காட்சி அளித்தது. எனவே, முதலியாருக்கு சந்தேகம் தோன்றிற்று. மடப்பள்ளி அய்யரை அழைத்து, "இது ஏதய்யா அரிசி'' எனக்கேட்டார்.

"சுப்பிரமணியம், தன்னுடைய பங்கு பிரசாதத்துக்குப் பதிலாக, அரிசியாகக் கொடு, என்று வாங்கிக் கொண்டார்''—என்ருர் மடப்பள்ளி அய்யர்.

தர்மகர்த்தாவுக்குக் கோபம்வந்து விட்டது.

"ஏனய்யா, குருக்கள்!—இந்த வேலை எத்தனை நாளாக? சாமிக்குப் பிரசாதம் படைப்பதாகக் கூறி அரிசியையே காண்பித்து விடுகிறீர்களா; நன்ருய் இருக்கிறதையா, உம் யோக்கியதை; நீங்கள் இப்படிச் செய்வதனுல்தான், இந்தச் சு. ம.க்கள் உங்களைச் சாடுகிருர்கள். இத்தாய்யா, இனிமேல் இப்படிப்பட்ட காரியம் செய்வதில்லை என்று எழுதிக் கொடுத்து விட்டுப் போ' — என்ருர், முதலியார்.

குருக்கள், குறுக்கே ஒன்றும் பேசாமல் எழுதித் தந்து விட்டுச் சென்று விட்டார்.

"அர்ச்சனை செய்யவில்லை என்று பையனை அலற அலற அடித்து விட்டேன்; இவர்களையார் அடிப்பது? அந்த ஆண்டவன் தான் அடிக்க வேணடும்; அவர் எங்கே அடிக்கப் போகிருர்? அவர் அடிப்பார் என்ற அச்சமிருந்தால், இந்த அர்ச்சகன் இப்படிச் செய்வானு என்று அங்கலாய்த்துக் கொண்டார் — அறம் காக்குர் கோவிந்தசாமி.

திருமண அழைப்பு

எனது வாழ்க்கை ஒப்பந்த விழா 1—7—53 புதன் காலை 9 மணிக்கு மணமகள் வெ. சுப்புலட்சுமியின் இல்லத்தில் (வடுகபட்டியில்) அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ஈ. வி. கெ. சம்பத் மற்றும் பல தமிழறிஞர்கள் விழாவில் கலந்து கொள்கிருர்கள். நண்பர்கள் யாவரும் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஈரோடு-இரா. பெருமாள்.

சிதம்பரத்தில்!

தென் ஆற்காடு மாவட்ட மாநாடுகள்

ஜூலை 4, 5 (சனி ஞாயிறு) தேதிகளில்

கைவல்யம் பந்தலில் மஜீத் அரங்கில்

முதல் நாள்	இரண்டாவது நாள்
தலைவர்:	தலைவர்:
க. அன்பழகன் எம். ஏ.	**சி. பி. சிற்றரசு**
திறப்பாளர்:	திறப்பாளர்:
சி. வி. எம். அண்ணுமலை	**இராம. அரங்கண்ணல்**

கலைக் கண்காட்சித் திறப்பாளர்:

கலைஞர் **எம். ஜி. ராமச்சந்திரன்**

பேச்சாளர்கள்: பொதுச்செயலாளர் அண்ணுதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன். மு. கருணுநிதி, கே. எ. மதியழகன், ஆசைத்தம்பி, இளங்கோ, மனோகரன், இளம்வழுதி, பொன்னம்பலனுர், இராமாமிர்தத்தம்மை, சத்தியவாணிமுத்து, அருண்மொழி, பூங்கோதை

கலைச் சோற்பொழிவு: என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, சிவாஜி கணேசன்' எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி.

இன்னிசை: தமிழிசை வல்லுனர் சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, செல்லமுத்து.

நாடகங்கள்: **காதல் ஜோதி, சந்திரோதயம்**

இரா. பாலகுருசாமி,
வ. தலைவர்.

தில்லை-வில்லாளன், இரா. சக்கரவர்த்தி
செயலாளர்கள்

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.